# රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
# அரச கணக்குகள் திணைக்களம்
# Department of State Accounts

මගේ අංකය / எனது இல. / My No. SA/APM/02/02/26 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2024.10.28


அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
அனைத்து திணைக்களத் தலைவர்கள்
அனைத்து மாவட்ட செயலாளர்கள்

**<u>அரசாங்க சம்பளப்பொதி(GPS) குறித்த பயிற்சித் திட்டங்களை நடத்துதல்</u>**

அரச கணக்குகள் திணைக்களம் அரசாங்க சம்பளப்பொதியொன்றை(GPS) அறிமுகப்படுத்தியுள்ளது. இது அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அவற்றின் துணை அலுவலகங்களால் சம்பளத் தயாரிப்புக்காக பயன்படுத்தப்படுகிறது. இந்த முன்முயற்சியின் ஒரு பகுதியாக, அரச கணக்குகள் திணைக்களம் உத்தியோகபூர்வ GPS பயிற்சியை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் முன் அனுமதியின்றி மூன்றாம் தரப்பினர் GPS பயிற்சியை நடத்த அனுமதிக்கப்படுவதில்லை என்பதை தயவுசெய்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

02. தற்போதைய முறையை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளில் . அரச கணக்குகள் திணைக்களம் புதிய சம்பளப்பொதிக்கு மாறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. புதிய முறை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் வரை. தற்போதுள்ள GPS ஐப் பயன்படுத்தி அனைத்து சம்பளங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும்.

03. தற்போது பல்வேறு நிறுவனங்களும் தனிநபர்களும் GPS பயிற்சித் திட்டங்களை வழங்கி வருவது எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது. எவ்வாறாயினும். அத்தகைய பயிற்சியை நடத்துவதற்கு முன், அரச கணக்குகள் திணைக்களத்தின் அனுமதி தேவை என்பதை நினைவில் கொள்ளவும்.ஏதேனும் அப்படியான பயிற்சித் திட்டங்களை முடித்தவுடன் அரச கணக்குகள் திணைக்களத்துக்குத் தெரிவிக்க வேண்டும்.




මහා භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව   பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை.   General Treasury, Colombo 01, Sri Lanka.
General-Tel.: +94 11 2484500/600   Ext.: 1149   Fax: +94 11 2484869   Website: www.sad.gov.lk
Director General - Tel.: +94 11 2484728   Fax: +94 11 2473856   e - mail : dgsa@sad.treasury.gov.lk

04. பயிற்சியின் தரம் மற்றும் துல்லியத்தை உறுதி செய்வதற்காக, ஊழியர்களை பங்கேற்க அனுமதிக்கும் முன், அரச கணக்குகள் திணைக்களம் அந்த GPS பயிற்சித் திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளதா என்பதை நீங்கள் சரிபார்க்க வேண்டியது அவசியம். முறையாக அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சித் திட்டங்களில் வழங்கப்படும் பிழையான அறிவுறுத்தல்களால் ஊழியர்களினால் ஏற்படுத்தப்படும் ஏதேனும் பிழைகள் அல்லது சிக்கல்களுக்கு திணைக்களம் பொறுப்பேற்காது.

05. அரச கணக்குகள் திணைக்களம் மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் தனது சொந்த GPS பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்யும். உங்கள் அலுவலகத்திற்கு GPS பயிற்சி தேவைப்பட்டால், திணைக்களத்தின் இணையதளத்தில் உள்ள விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி முறையான கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும்.

06. இது தொடர்பில் உங்களுக்கு மேலதிக தெளிவு தேவையென்றால், 011-2034516 அல்லது 011-2484782 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

கையொப்பமிடப்பட்டது . டபிள்யு .ஏ. சமன்த உபனந்த
பணிப்பாளர் நாயகம்